செய்தி வெளியீடு எண். 08-2016 நாள்: 04.10.2016

விழுப்புரம் மாவட்டம் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பாரதப் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டம் 2016-2017ன் கீழ் கல்வி உதவித்தொகை பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அவர்கள் தகவல்.

******

MBBS, BUMS, BNYS, BVSC & AH, BAMS, BHMS, BSMS, BDS, B.Pharma, Pharm.D, B.Sc BPT, B.Sc MLT, BOT, B.Sc (Nursing), GNM, B.Sc OT&AT, B.Sc (Medical Micro-Bio), B.Sc (Micro & Biology), BBC (Bio-Tech, Bio-Chem&Chem), B.Sc (Forensic Science), B.Sc (Optometry), BASLP (Bachelor of Audiology & Speech Language Pathology), B.Sc (Speech & Hearing), B.Sc (Bio-Medical) ஆகிய படிப்புகளில் மருத்துவ கவுன்சில் அல்லது தொழில் கல்வி கவுன்சில் அல்லது பல்கலை கழக மானியக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள் / கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற (அலுவலர் தரத்திற்கு கீழ் இதர தரத்தினர்) முன்னாள் படைவீரர்களது சிறார்கள் / விதவையர்கள் மற்றும் படைப்பணியின் போது இறந்த / ஊனமுற்ற படைவீரர்களின் விதவையர் சிறார்கள் ஆகியோருக்கு பாரத பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. இக்கல்வி உதவித்தொகை பெற +2 மற்றும் முதுகலை பட்டத்திற்கான குறைந்தபட்ச கல்வி தகுதியில் 60%க்கு மேல் மதிப்பெண் பெற்று இருத்தல் வேண்டும். மேலும் 2016-2017ம் கல்வியாண்டில் சேர்க்கைப் பெற்றவர்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

இவ்விண்ணப்பத்தை www.ksb.gov.in இணையதளத்தில் PMSS Tab Link மெனுவின் மூலம் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அவ்விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளவும். அவ்விண்ணப்பத்தினை உரிய முறையில் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களுடன் சரிபார்த்தலுக்கான கடைசி நாள் 15.11.2016-க்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்

கொள்ளப்படுகிறார்கள். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இவ்விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாகவே விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பிக்கும் முன் இவ்வலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்து Scan மற்றும் upload செய்ய வேண்டிய கீழ்கண்ட முக்கிய ஆவணங்களை சரிபார்த்து பெற்றபின், இணையதளத்தில் விண்ணப்பிப்பது தவறுகளை குறைக்க வழிவகுக்கும்.

(i) Annexure -- 01 ( Specimen copy of Ex-serviceman)

(ii) Annexure -- 02 ( Bonafide Certificate )

(iii) Annexure -- 03 ( Bank Branch Manager Certificate)

(iv) Aadhar Card

(v) Student Mark Sheet

(vi) Bank Pass Book 1st page SBI (or) PNB

(vii) Cancelled Cheque Slip

(viii) Ex-servicemen Identity Card

(ix) Discharge Book

எனவே, மேற்கொண்டு தேவைப்படும் விவரங்களுக்கு விழுப்புரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

*செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.*